1990 மார்ச் 20]

கோவில்பட்டி பத்திரப்பதிவு சார்பதிவாளர் அலுவலகம்.

*6839 திரு. சோ. அழகர்சாமி:

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவில்பட்டி பத்திரப்பதிவு சார் பதிவாளர் அலுவலகத்துடன் சேர்ந்திருந்த 8 கிராமங்கள் 1-9-1989-ல் புதிதாக துவக்கப்பட்டுள்ள கலிங்கப்பட்டி சார் பதிவாளர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதனால் அக்கிராம மக்களுக்கு ஏற்படும் சிரமத்தைப் போக்க மீண்டும் மேற்படி 8 கிராமங்களை கோவில்பட்டி சார் பதிவாளர் அலுவலகத்துடன் இணைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 1-9-1989 முதல் கலிங்கப்பட்டி சார் பதிவகத்துடன் இணைத்து, 30-10-1989 முதல் மீண்டும் வடக்குப்பட்டி சிற்றூர் தவிர்த்து மற்ற 7 சிற்றூர்கள் கோவில்பட்டி சார் பதிவகத்துடன் இணைக்கப்பட்டன.

திரு. அழகர்சாமி அவர்கள் இப்போது இருக்கையில் இல்லை. இந்த கேள்விக்கு ஏற்கெனவே பதில் சொல்லியாயிற்று, அவரும் திருப்தி அடைந்தாயிற்று. எனவே நான் கருதுகிறேன். இது பழைய கேள்வி, இப்போது புது உருவில் வந்திருக்கிறது.

பிராட்கேஜ் ரயில்பாதை.

*3321 திரு. ஆச்சியூர் எம். மணி:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தூத்துக்குடியிலிருந்து நாங்குநேரிவரை பிராட்கேஜ் ரயில் பாதை அமைத்து நெல்லை—குமரி ரயில் பாதையுடன் இணைக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

மடிப்பாக்கம்—தலைமைச் செயலகம் பேருந்து.

*6522 திரு. ப. காளியப்பன்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—